பிரஸார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

18 06 2024 6 30

செவ்வாய்கிழமை மாலை

தலைப்புச் செய்திகள்

- பிரதமரின் விவசாயிகள் வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ் 17-வது தவணையாக 20 ஆயிரம் கோடி ரூபாயை பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று மாலை விடுவித்தார்.
- தமிழகத்தில் கீழடி உள்ளிட்ட எட்டு இடங்களில் தொல்லியல் அகழாய்வுப் பணிகளை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று காணொலி வாயிலாக தொடங்கி வைத்தார்.
- தஞ்சாவூர் மாவட்டம் திருக்கானூர் பட்டியில் அவசரகால மருத்துவ சிகிச்சை மையம் ஓராண்டுக்குள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு மா சுப்ரமணியன் கூறியுள்ளார்.
- தமிழகத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளார்.
- பாரிஸ் ஒலிம்பிக் துப்பாக்கி சுடும் போட்டியில் பங்கேற்க இந்தியாவின் பிரித்விராஜ் தொண்டைமான் தலைமையிலான அணி தகுதிபெற்றுள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் -*

[]<<<>>>[]

பிரதமரின் விவசாயிகள் வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ் 17-வது தவணையாக 20 ஆயிரம் கோடி ரூபாயை பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று மாலை விடுவித்தார்.

இன்று மாலை வாரணாசியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், விடுவிக்கப்பட்ட இந்த தொகை நாடு முழுவதிலும் உள்ள ஒன்பது கோடியே 26 லட்சம் விவசாயிகளின் வங்கி கணக்குகளில் நேரடியாக செலுத்தப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் விவசாய தொழில்நுட்ப பயிற்சி பெற்ற சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 30 ஆயிரம் பெண்களுக்கு க்ரிஷி சகி சான்றிதழ்களையும் திரு நரேந்திரமோடி வழங்கினார்.

பிரதமர் வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ் வாரணாசியிலிருந்து நிதியை விடுவிக்கும் நிகழ்ச்சியை காணொலி வாயிலாக நாமக்கல்லில் மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை இணை அமைச்சர் Shobha Karandlaje பார்வையிட்டார்.

பின்னர் விவசாயிகளிடையே உரையாற்றிய அவர், பிரதமர் திருந ரேந்திரமோடி விவசாயிகளுக்கு உயர் முன்னுரிமை அளித்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகத் தெரிவித்தார்.

தமிழகத்தில் இந்த திட்டத்தின் கீழ் அதிக அளவில் விவசாயிகளை பயனடையச் செய்ய வேண்டுமென்ற நோக்கில் அரசு செயல்பட்டு வருவதாக் கூறினார்.

ஏவ்வித பாகுபாடுமின்றி தகுதியுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் பிரதமரின் வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ் நிதி உதவி அளிக்கப்பட்டு வருவதாகவும் சோபா Karandlaje தெரிவித்தார்.

[]<<<>>>[]

கிராம பஞ்சாயத்து தலைவர்கள் யோகாசன பயிற்சி மற்றும் சிறுதானியங்களின் பயன்கள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தி ஒட்டுமொத்த ஆரோக்கிய வளர்ச்சியை மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டுமென பிரதமர் திரு நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

கிராம பஞ்சாயத்து தலைவர்களுக்கு பிரதமர் எழுதியுள்ள கடிதத்தில், பஞ்சாயத்து வளாகங்கள், பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், சுகதார மையங்கள், உள்ளிட்ட இடங்களில் யோகா பயிற்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

இதுபோன்ற பயிற்சி மக்களுக்கு குறிப்பாக இளைஞர்களுக்கு நல்ல உடல் ஆரோக்கியத்தை அளித்து மன அழுத்தமில்லா வாழ்க்கை முறையை கடைபிடிப்பதற்கு உதவிடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

பத்தாவது சர்வதேச யோகா தினத்தையொட்டி கிராமப் பகுதிகளில் வசிக்கும் அனைத்து மக்களுக்கும் தமது வாழ்த்துக்களை தெரிவிப்பதாகக் கூறியுள்ள பிரதமர், உலக அளவில் கொண்டாடப்படும் யோகா திருவிழா மக்களுடைய வாழ்க்கையில் நேர்மறையான பயன்களை அளித்திடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த ஆண்டின் சர்வதேச யோகா தின கருப்பொருளாக தனக்கும், சமூகத்துக்குமான யோகா என தெரிவு செய்யப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆரோக்கியமான தேசத்தை உருவாக்க மத்திய அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் தொன்மை சிறப்புமிக்க கலாச்சாரம் அளித்த கொடையாக யோகாசனம் உள்ளது என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

ஊட்டச்சத்துமிக்க உணவை மக்கள் உண்டு பயன்பெற வேண்டும் என்ற நோக்கில் சிறுதானிய வகைகளை ஊக்குவிக்கும் 'ஸ்ரீஅன்ன' இயக்கம் தொடங்கப்பட்டுள்ளதாகவும் திரு நரேந்திரமோடி அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் கீழடி உள்ளிட்ட எட்டு இடங்களில் தொல்லியல் அகழாய்வுப் பணிகளை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று காணொலி வாயிலாக தொடங்கி வைத்தார்.

சிவகங்கை மாவட்டம் கீழடி மற்றும் கொந்தகை, விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை, திருவண்ணாமலை மாவட்டம் கீழ்நமண்டி, புதுக்கோட்டை மாவாட்டம் பொற்பனைக் கோட்டை, தென்காசி மவாட்டம் திருமலாபுரம், கிருஷ்ணகிரி மாவட்டம் சென்னானூர், திருப்பூர் மாவட்டம் கொங்கல்நகரம், கடலூர் மாவட்டம் மருங்கூர் ஆகிய இடங்களில் இந்த அகழாய்வுப் பணகள் மேற்கொள்ளப்படுகின்றன.

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டையில் 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மூன்றாம் கட்ட அகழாய்வுப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு ஜெயசீலன் தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - ஆட்சியர் ) -32--- செகண்ட்*

[]<<<>>>[]

ராமானுஜர் குறித்து முன்னாள் முதலமைச்சர் மு கருணாநிதி எழுதிய புத்தகம் இந்து சமய அறநிலையத்துறை மூலம் நூலாக வெளியிடப்பட்டுள்து.

இது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின், அடித்தட்டு மக்களின் சுயமரியாதையை காப்பதற்காக பாடுபட்ட ராமானுஜரின் காவியத்தை தமது நிறைவுகால படைப்பாக மு கருணாநிதி வழங்கியுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார்.

சமயங்களும், சமய நெறிகளும் மானுடத்தை மேம்படுத்த, ஒற்றுமையை வளர்க்க, ஏற்றத்தாழ்வுகளை நீக்க வழிகாட்டட்டும் என்றும் அந்த வலைதளப்பிவில் திரு மு க ஸ்டாலின் கூறியுள்ளார்.

[]<<<>>>[]

தஞ்சாவூர் மாவட்டம் திருக்கானூர் பட்டியில் அவசரகால மருத்துவ சிகிச்சை மையம் ஓராண்டுக்குள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தூரில் புதிய துணை சுகாதார கட்டிடத்தை திறந்து வைத்த பின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

*( சவுண்ட்பைட் - மா சு ) -40----- செகண்ட்*

[]<<<>>>[]

நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்களுக்கான பயிற்சி வகுப்பை சென்னை கிண்டியில் உள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் மாநில அமைச்சர் திரு ஏ வ வேலு இன்று தொடங்கி வைத்தார்.

நெடுஞ்சாலைத் துறையில் புதிதாக பணியில் சேர்ந்துள்ள உதவி பொறியாளர்கள் மற்றும் பதவி உயர்வு பெற்ற இளநிலை பொறியாளர்களுக்கு இந்த அடித்தள பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

இதனை தொடங்கி வைத்து பேசிய அமைச்சர் திரு ஏ வ வேலு, இந்திய சாலைகள் குழுமத்தின் வழிகாட்டுதலின்படி இந்த பயிற்சி வழங்கப்படுவதாகத் தெரிவித்தார்.

பொறியாளர்களின் திறனை அதிகரிப்பதற்கு இந்த பயிற்சி உதவிடும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

தமிழகத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

*( சவுண்ட்பைட் - செ க ) ---45 செகண்ட்*

[]<<<>>>[]

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே செங்கலப்பட்டி பட்டாசு ஆலை வெடி விபத்தில் உயிரிழந்த பத்து தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு தமிழக அரசு அறிவித்த மூன்று லட்சம் ரூபாய் நிவாரணத் தொகையை ஆட்சியர் திரு ஜெயசீலன் இன்று வழங்கினார்.

[]<<<>>>[]

காஞ்சிபுரம் மாவட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் முதலமைச்சரின் இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்குமாறு ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் கேட்டுக் கொண்டுள்ளார்.

[]<<<>>>[]

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் சட்டவிரோத துப்பாக்கிகளை ஒப்படைக்க வலியுறுத்தி வனத்துறை சார்பில் இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

[]<<<>>>[]

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் தாலுகா அலுவலகத்தில் நடைபெற்ற கிராம கணக்குகள் குறித்த தணிக்கை முறையான ஜமாபத்தியில் ஆட்சியர் திருமதி பூங்கொடி கலந்து கொண்டு பொதுமக்களிடம் மனுக்களை பெற்றுள் கொண்டார்.

[]<<<>>>[]

சிவகங்கை மாவட்டத்தில் அனைத்து வட்டங்களிலும் வருவாய் தீர்வாய நிகழ்ச்சியை ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் இன்று தொடங்கி வைத்தார்.

[]<<<>>>[]

பாரிஸ் ஒலிம்பிக் துப்பாக்கி சுடும் போட்டியில் பங்கேற்க இந்தியாவின் பிரித்விராஜ் தொண்டைமான் தலைமையிலான அணி தகுதிபெற்றுள்ளதாக தேசிய துப்பாக்கிச் சுடுதல் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

Shot gun பிரிவுக்கான இந்த அணியில் அனந்த் ஜீத் சிங், மகேஸ்வரி சௌகான், ரைசா தில்லான், ராஜேஸ்வரி குமாரி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

*End of News*